பதிவு அஞ்சல் மூலமாக :

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (பணியாளர்) அவர்களின்
செயல்முறை நடவடிக்கைகள்
வழங்குபவர் : திரு.த.இரகு

செ.மு.ந.எண்: 11333/எஸ்2/2021–2

நாள்: 12.07.2022

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருமதி.செ.நாகலட்சுமி, இளநிலை உதவியாளர் பதவியில் – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையரின் செயல்முறை ஆணை எண். 4020/எம்5/2021, நாள்: 25.06.2021.
2. கடலூர் (மண்டலம்) மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநரின் கடித எண். 2220/அ/2022, நாள்: 22.06.2022.

******

ஆணை :

பார்வை–1ல் காணும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையரின் செயல்முறை ஆணையின்படி ஆதாரப் பணியான அலுவலக உதவியாளர் பணியிலிருந்து அமைச்சுப்பணியான இளநிலை உதவியாளர் பதவிக்கு பணி மாறுதல் செய்யப்பட்டு ஆணையிட்டவாறு, திருமதி.செ.நாகலட்சுமி 01.07.2021 முற்பகல் இளநிலை உதவியாளராக கடலூர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

மேற்காணும், பணியாளரது பணியினை தமிழ்நாடு அரசு பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, விதி (28)(1)–ன் படி இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 01.07.2021 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

மேலும், பணியில் சேர்ந்த நாள்முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தொடர்ந்து வரும் மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

தமிழ்நாடு அமைச்சுப்பணிகளுக்கான சிறப்பு விதிகளின் விதி 34–ன் படி, தகுதிகாண் பருவ காலத்தில், தமிழ்நாடு மீன்துறை நடைமுறை நூல் பாகம் 1 –ல் தேர்ச்சி பெற வேண்டும். மேலும், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் வழங்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படைப் பயிற்சியினை முடிக்க வேண்டும், தவறின் அவர்களது இரண்டாவது மற்றும் அதற்கடுத்த ஆண்டு ஊதிய உயர்வுகள் திரண்ட பயனின்றி நிறுத்தி வைக்கப்படும்.

24/12/23

உதவி இயக்குநர்,
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை,
கடலூர்.

மேற்குறித்த தேர்வுகளில் அதிகபட்சமாக 5 ஆண்டு காலம் தேர்ச்சி பெறாமல் இருந்தால் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட மாட்டாது. மேலும் பதவி இறக்கம் செய்ய நேரிடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

14-7-2022

துணை இயக்குநர் (பணியாளர்)
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

14/07/2022 3/60

பெறுநர்
திருமதி. செ.நாகலட்சுமி,
இளநிலை உதவியாளர்
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், கடலூர் – மூலமாக

24/12/23

உதவி இயக்குநர்,
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை,
கடலூர்.

நகல்

1. துணை இயக்குநர்,
   மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
   (மண்டலம்) கடலூர்.
2. உதவி இயக்குநர்,
   மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
   கடலூர்
   – தனியரின் பணிப்பதிவேடு மற்றும் பதிவுத்தாள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அதனை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புகை அளித்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.
3. எம்5 – உதவியாளர், தலைமை அலுவலகம்.
4. எஸ்2 – இருப்பு கோப்பு.

நகல் பெற்றுக்கொண்டேன்
செ.நாகலட்சுமி
21/7/2022